Registered as a Newspaper

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

விலை: ரூ. 1-25

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ ஆனி மீ 11 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷவ்வா பிறை 27 (25 – 06 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 180

## யாழ். செஞ்சிலுவை சங்கத்திற்கு அழைப்பு இல்லை

யாழ்ப்பாணம், ஜூன் 25

இந்திய உணவுக் கப்பலில் வரும் பொருள்களை கையேற்கும்படியோ அல்லது அதில் வரும் இந்திய உயர் அதிகாரிகளை வரவேற்குமாறோ யாழ். செஞ்சிலுவைச் சங்கத்திற்கு அழைப்பு எதுவும் யாரிடமிருந்தும் உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை.

–இவ்வாறு யாழ். செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஒருவர் கூறினார்.

வானொலி, பத்திரிகைச் செய்திகளைமுன்வைத்தே யாழ். செஞ்சிலுவைச் சங்கம் இந்தியக் கப்பலை வரவேற்கச் செல்கிறது என்றும் அவர் சொன்னார். (உ–எ)

## பூரி, கப்டன் குப்தா இன்று வடக்கே வருவர்

கொழும்பு, ஜூன் 25

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் திரு. எஸ். எச். பூரி, பாதுகாப்பு அதிகாரி கப்டன் வி. கே. குப்தா ஆகியோர் இன்று வியாழன் விமான மூலம் கொழும்பில் இருந்து காங்கேசன்துறை வந்து சேர்வர் என எதிர் பார்க்கப்படுகிறது.

இவர்களுடன் கொழும்பு செஞ்சிலுவைச் சங்க ஊழியர்கள், கொழும்பு வெளியுறவு அமைச்சு அதிகாரி திரு. ராஜபக்ஷ ஆகியோரும் விமானம் மூலம் காங்கேசன்துறை வருவர். (உ–எ)

## லயனலும் வருகிறார்

கொழும்பு, ஜூன் 25

கொழும்பில் இருந்து சிவில் பாதுகாப்புஅமைச்சுச் செயலாளர் லயனல் பேர்னண்டோ வியாழன் (இன்று) பலாலி வருகின்றார்.

இவருடன்தேசிய பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகளும் வருகின்றனர்.

இந்திய உணவுப் பொருள்களைப் பொறுப்பேற்பது, விநியோகிப்பது ஆகியன சம்பந்தப்பட்ட அலுவல்களை இவர்கள் மேற்பார்வை செய்வர். (உ-எ)

## 2 கப்பல்களும் 5 தடவை பொருள்களுடன் வரும்

புதுடில்லி, ஜூன் 25

இன்று காங்கேசன் வரும் இரண்டு இந்தியக் கப்பல்களும் இன்னும் தலா ஐந்து தடவைகள் குடா நாட்டிற்கு நிவாரண உணவுகளை ஏற்றிவரும்.

மொத்தமாக 6 ஆயிரத்து 500 மெட்ரிக் தொன் உணவுப்பொருள்களை அனுப்பி வைக்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

முதல் தொகுதி உணவுப் பொருள்கள் யாழ் குடாநாட்டில் விநியோகிக்கப்படுவதில் காணப்படும் முன்னேற்றத்தைப் பொறுத்தே அடுத்த தொகுதி உணவுப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படுவது பற்றி தீர்மானிக்கப்படும்என்று புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று காங்கேசன் துறை துறைமுகம் வந்து சேரும் உணவுப்பொருள்கள், வந்து சேர்ந்த 36 மணித்தியாலங்களுக்குப் பின்னர் மக்களுக்கு விநியோகிக்கும் வேலைகள் ஆரம்பமாகும் என்று ஸ்ரீலங்கா அரசு, இந்தியாவுக்கு உறுதிமொழி அளித்து இருப்பதாகவும் புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ–எ)

### திடீரென விலகிக்கொண்ட அதிகாரிகள்

சென்னை, ஜூன் 25

சென்னையில் உள்ள ஸ்ரீலங்கா தூதரக அதிகாரிகள் இந்திய உணவுக் கப்பலுடன் வரவில்லை.

இந்திய அதிகாரிகள் வற்புறுத்தியும் ஸ்ரீலங்கா அதிகாரிகள் கப்பலில் ஏறவில்லை.

''கொழும்பில் இருந்து உயர் அதிகாரிகள் வருகின்றார்கள். அதனால் தான் நாம் வரவில்லை''– இப்படி ஸ்ரீலங்கா தூதரக அதிகாரி திரு. ஜெயசிங்க இந்திய அதிகாரிகளிடம் தெரிவித்தார்.

முன்னர் இந்த அதிகாரிகளும் கப்பலில் வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. (உ–எ)

### சுபநேரம்

25–06–1987
வியாழக்கிழமை
சுபநேரம்:–
07.25 முதல் 08.55வரை
ராகுகாலம்:–
01.25 முதல் 02.55 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
அமாவாசை விரதம்

## கப்பலில் வரும் இந்திய செய்தியாளர் இறங்க அனுமதி இல்லை?

கொழும்பு, ஜூன் 25

இந்தியக் கப்பலில் வரும் பத்திரிகையாளர்கள் கப்பலில் இருந்து கரைக்கு வர அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கப்பலில் இருந்தபடியே உணவுப் பொருள்கள் இறக்கப்படுவதைப்படம் பிடிக்கலாம்; செய்தி சேகரிக்கலாம்.

இந்தியக் கப்பலில் இந்திய மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் வருகின்றனர். (உ–எ)

அங்கும் சரித்திரம்; இங்கும் சரித்திரம்!

# தமிழ் மக்கள் பட்டினி தீர்க்க புறப்பட்டது இந்தியக் கப்பல்!

## காங்கேசனில் வரவேற்க அரச, தொண்டர்நிறுவன அதிகாரிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடையாலும், இராணுவ நடவடிக்கைகளாலும் அல்லலுறும் தமிழ் மக்களின் – யாழ்ப்பாண மக்களின் பசி தீர்க்கவும் நோய் தீர்க்கவும் — இந்தியா வழங்கும் மனிதாபிமான உதவியான உணவுப் பொருள்களையும், மருந்து வகைகளையும் ஏற்றிக்கொண்டு — காங்கேசன்துறை புறப்பட்டுவிட்டது 'ஐலண்ட் பிறைட்' என்ற இந்தியக் கப்பல்!

அது இன்று காலை காங்கேசன் துறைமுகம் வந்து சேரும்.

நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு வரும் இந்தியக் கப்பலை வரவேற்க யாழ்ப்பாண மக்களுக்கு வாய்ப்பில்லை. துறைமுகப் பகுதி இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதால், அரசாங்க அதிகாரிகளும் தொண்டர் ஸ்தாபன அதிகாரிகளுமே கப்பலை வரவேற்று நிவாரணப் பொருள்களைக் கையேற்க ஏற்பாடாகி உள்ளது. அவர்களும் இராணுவத்தின் முன் அனுமதி பெற்றே செல்லவேண்டி ஏற்பட்டிருக்கிறது.

இந்தியா ஈழத் தமிழர்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்குவது யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் ஒரு சரித்திர நிகழ்ச்சி. இந்தியாவைப் பொறுத்த வரையிலும் சரித்திர நிகழ்ச்சி. சரித்திரம் பல படைத்த சென்னைத் துறைமுகத்தில் யாழ்ப்பாணத்துக்கு நிவாரணப் பொருள் எடுத்துச் சென்றும் நேற்றுச் சரித்திரம் படைக்கப்பட்டதாக இந்திய தகவல் சாதனங்கள் வர்ணித்தன.

கப்பல் சென்னையிலிருந்து புறப்பட்டவேளை தமிழக மக்கள் அதனை ( 4ஆம் பக்கம் பார்க்க)

### ஹெலிகள் நோட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்25

யாழ். நகரப் பகுதியை நேற்று மாலை இரண்டு ஹெலிக் கொப்டர்கள் தாழப்பறந்து சுமார் இரு மணி நேரம் வட்டமிட்டன.

இதனால் நகரில் சற்றுப் பதற்றம் நிலவியது.

ஹெலிக்கொப்டர்கள் வட்டமிட்டுச் சென்ற பின்னர் முகாமில் இருந்து ஷெல் தாக்குதலும் துப்பாக்கிப் பிரயோகமும் நகரப் பகுதியை நோக்கி மேற்கொள்ளப் பட்டன. (உ-10)

### உதவும் நாடுகள் கூட்டம் இன்று

பாரிஸ், ஜூன் 25

ஸ்ரீலங்காவிற்கு நிதி உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் இன்று பாரிஸில் நடைபெறுகிறது. (உ)




நன்றி: "THE HINDU"

## இரகசியப் பொலீஸ் விசாரணையில் சிறிமா

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா இரகசியப் பொலீஸாரினால் சுமார் 90 நிமிடங்கள் விசாரிக்கப்பட்டார்.

அவரின் ரொஸ்மீட் இல்லத்தில் வைத்தே பொலீஸார் அவரை விசாரித்தனர்.

யூகோஸ்லேவியா செல்லும் முன்னர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் கூறியதாகக் கூறப்படும் தகவல்கள் குறித்தே பொலீஸ் விசாரணை இடம் பெற்றதாகத் தெரிகிறது.

புறக்கோட்டை குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின்னணியில் இஸ்ரவேலிய மொஸாட் உள்ளது என்று கூறுபவர்களைப் பிழைகாண முடியாது – இப்படி அந்த செய்தியாளர் மாநாட்டில் திருமதி பண்டாரநாயக்கா கூறியிருந்தாராம்.

பொலீஸ் விசாரணையின் போது, தான் அப்படிக் கூறவில்லை என்று திருமதி பண்டாரநாயக்கா மறுத்து விட்டார் என்று தெரியவருகின்றது.

'தொடர்ந்து எனது கருத்துக்களை வெளியிடுவேன். சொல்ல வேண்டியதை உரிய நேரத்தில் தெரிவிப்பேன்' – இப்படி திருமதி பண்டாரநாயக்கா கொழும்புச் செய்தியாளர்களிடம் பின்னர் தெரிவித்தார். (உ-எ)

# இடைக்காடு முகாமிலிருந்து முன்னேறும்முயற்சி முறியடிப்பு

## ஹெலித் தாக்குதலில் வயோதிபப் பெண் பலி!!

பலாலி, ஜூன் 25

நேற்று இடைக்காடு மினி முகாமில் இருந்து வெளியேற முயன்றஇராணுவப் படையை விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதல் நடத்தித் திருப்பி அனுப்பினர்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் ஹெலிக்கொப்டர் நடத்திய தாக்குதலால் வயோதிப விதவைப் பெண் திருமதி ராசா செல்லம் (70 வயது) என்பவர் வீதியில் துடிதுடித்து மரணமானார்.

கை துண்டாகி, குடல் வெளியேறிய நிலையில்பரிதாபகரமான முறையில் அவர் உயிரிழந்தார்.

மேலும் மூவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மூன்று வீடுகள் மிக மோசமாகச் சேதமடைந்தன.

இச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:—

நேற்று முன்தினம் இரவோடிரவாக கதிரிப்பாய் — உறணைப் பகுதியூடாக முன்னேறி, பத்தமேனிப் பிள்ளையார் கோவிலுக்கு வடக்கே யுள்ள பற்றைகள், மர மறைவுகள் வெளிகளினுள்ளும் படுத்திருந்த இராணுவத்தினர் நேற்று அதிகாலை 5 மணியளவில் முன்னேறி, சென்றியில் நின்ற போராளிகளைத் தாக்க முயன்றனர்.

போராளிகள் எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் இராணுவ தரப்பில் பல இழப்புக்கள் ஏற்பட்டதாகத் தெரிகின்றது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து இரண்டு (4 ஆம் பக்கம் பார்க்க)

### 5 இப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், ஜூன்25

கடந்த செவ்வாய்க் கிழமை மாலை 5 மணியளவில் சிலாவத்துறையிலிருந்து முருங்கனிற்கு கால் நடையாகச் சென்ற இராணுவத்தினர் மீது நாம் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

- இப்படி விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர். (உ)

## லலித் - சிவா லண்டனில் விவாதம்

லண்டன், ஜூன் 25

ஸ்ரீ லங்கா இனப்பிரச்சினை தொடர்பான விவாதம் ஒன்றில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரமும் தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலியும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்ச்சி எதிர்வரும் 28ஆம் திகதி லண்டனில் நடைபெறும்.

லண்டன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (எல். பி. ஸி.) இதனை நடத்துகின்றது.

ஸ்கண்டிநேவிய நாடுகளில் தனது சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு திரு. சிவசிதம்பரம் நேற்று லண்டன் போய்ச் சேர்ந்தார். (உ—ஐ–எ)

நாட்டைப் பிரிப்பதற்கு

## ஜே. ஆர்.-ராஜீவ் இரகசிய ஒப்பந்தம்

### ஜே.வி.பி.யின் துண்டுப்பிரசுரம்

கொழும்பு, ஜூன் 25

நாட்டைப் பிரிப்பதில் திரு. ஜெயவர்த்தனவுக்கும் திரு. ராஜீவ்காந்திக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் ஒன்று இருக்கின்றதாம்.

–மக்கள் விடுதலை முன்னணி வெளியிட்ட துண்டுப் பிரசுரம் ஒன்றில் இவ்வாறு தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 6ஆம் திகதி கட்டுநாயக்கா விமானத்தள மீதான தாக்குதல், அங்குள்ள விமான எதிர்ப்பு ஏவுகணைகளைக் கைப்பற்றும் முயற்சியாகவே நடத்தப்பட்டது.

இந்திய விமானங்கள் உணவுப் பொதிகளைப் போட்ட வேளைகளில் அந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படவில்லை. அதனை பாவிக்க முயன்ற ஒரு விமானப்படை அதிகாரி தடுக்கப்பட்டார்.

ஆகவே நாட்டைப் பிரி ( 4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



இந்தியா செய்த உதவியைப் பாராட்டியும், நன்றி தெரிவித்தும் ஊர்வலங்கள் நடத்திறதும் அவசியம் எண்டு எனக்குப் படுகுது...!

## ராஜீவ் ஆராய்வு

இலங்கை நிலைமை குறித்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சிரேஷ்ட அமைச்சர்களுடன் நேற்று நீண்ட நேரம் ஆலோசனை நடத்தினர்.

ஈழத்தமிழருக்கு நிவாரண உதவி வழங்குவது சம்பந்தமான தற்போதைய நிலைமை உட்பட பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது. ( உ–)

இளைய தலைமுறையின் இதயத்துடிப்பாக வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

**சேவை**

சேலைகள் அச்சிடுதல், தையல் வேலைகள் புதிய பழைய கிளை ஸ்தாபனங்கள் விளம்பரப் படுத்தும் அறிவித்தல்களை எழுதவும் பழைய சேலைகளுக்குப் புதுப்பொலிவுடன் தேவையான டிசைன்களில் அச்சிடுவதற்கும் நவீன தையல் வேலைகளைச் செய்யவும், கோவில் திரைச் சீலை விளம்பரச் சீலைகளைத் தேவையான விதத்தில் எழுதவும், பாதுகாப்பான சூழலில் அமைந்த இடம்.

வசந்தா றெக்ஸ்ரைல்ஸ் 42, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (1434)


## பாடசாலை சேதம்

பண்டத்தரிப்பு, ஜூன் 25

கடந்த வியாழக்கிழமை காரைநகரில் ஹெலிக்கொப்டர் நடத்திய தாக்குதலில் சுப்பிரமணிய வித்தியாசாலையும் பலத்த சேதமுற்றது.

கூரை ஓடுகள், மரங்கள், கதிரை மேசைகள் என்பன பலத்த சேதமடைந்துள்ளன.

கட்டடத் தரைகள் குண்டும் குழியுமாகவுள்ளன, (உ-120)

## ஆசிரியர்கள் தெரிவுப் பரீட்சை

கொழும்பு, ஜூன் 25

ஆரம்ப ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சை ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது.

அரச பாடசாலைகளில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஐயாயிரம் வெற்றிடங்கள் உண்டு. ஆனால் ஒரு லட்சத்துக்கு அதிகமானோர் விண்ணப்பித்துள்ளனர். (உ-எ)

பாதிக்கப்பட்ட மீனவருக்கு வழங்குவது போல்

# வாராந்த நிவாரணம் விவசாயிகளுக்கும் தருக!

### கமநல சேவைக் குழு விடுத்திருக்கும் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ் மாவட்ட மீனவருக்கு வழங்கப்படுவது போன்று விவசாயிகளுக்கும் வாராந்த நிவாரண உதவி வழங்க ஏற்பாடுகளை மேற்கொள்ளும்படி யாழ் மாவட்ட கமநல சேவை நிலையங்கள் சமாஜத்துக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கிழக்குத் தென்பகுதிக் கமநல சேவைக்குழு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

உரும்பராய் கமநல சேவைநிலையத்தில் கடந்த 18ஆம் திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தில் இது சம்பந்தமான தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு தலைவர் திரு. செ. ஐயாத்துரை தலைமை வகித்தார்.

தீர்மானம் வருமாறு:

பருவகால மாற்றம், வெள்ளஅழிவு, சந்தைப்படுத்தற் கஷ்டம், உரம் மற்றும் கிருமிநாசினி முதலியவற்றின் விலைஏற்றம், உற்பத்திப்பொருள்களின் விலைவீழ்ச்சி, எரிபொருள்தடை ஆகியன காரணமாக விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர, இராணுவ நடவடிக்கைகளினாலும் விவசாயிகள் பெரிதும் பாதிப்புற்றிருக்கிறார்கள்.

இதனால் விவசாயிகள் அன்றாட வாழ்க்கையைக் கொண்டுநடத்த முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஆகவே அவர்களதுபரிதாபநிலையைப் போக்க, பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு அளிக்கப்படும் வாராந்த நிவாரண உதவிபோன்று விவசாயிகளுக்கும் வாராந்த நிவாரண உதவிகள் கிடைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளவேண்டும்.

இப்படி தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

## மரண விசாரணை அதிகாரி



யாழ்ப்பாணம், ஜூன்25

கோப்பாய், நீர்வேலி, கிராம பிரதேசங்களின் திடீர் மரண விசாரணை அதிகாரியாக பத்திரிகையாளரான க. அருளானந்தன் இம்மாதம்முதல் நியமனம்பெற்றுள்ளார்.

இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரி, சுண்டுக்குழி சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாண அக்கடமி ஆகியவற்றில் உதவி ஆசிரியராக முன்னர் கடமையாற்றிய திரு. க. அருளானந்தன் 'வீரகேசரி' தினசரியின் ஆசிரியர் பகுதியின் உதவி ஆசிரியராகவும் இருந்தவர் தற்போது 'ஈழநாடு' பத்திரிகையின் உதவி ஆசிரியராகக் கடமையாற்றும் இவர்கலைத்துறைப் பட்டதாரியும், அமைச்சின் கனிஷ்ட பல்கலைக்கழகத்தின் பொதுசனத் தொடர்பு— பத்திரிகைக் கலைத்துறை டிப்ளோமா பட்டதாரியுமாவர்.

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் நூலகர் செய்முறைப் பயிற்சி பெற்ற திரு. அருளானந்தம், மேலைப் புலோலி சைவப்பிரகாச ஆண்கள் பாடசாலை, உடுப்பிட்டி அமெரிக்கமிஷன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி –பட்டதாரி பிரிவு ஆகியவற்றின் பழைய மாணவரும், காலஞ்சென்ற வர்த்தகர் ச. கதிர்காமத்தம்பி தம்பதிகளின் மகனுமாவார். (உ)

ராமகிருஷ்ணர் நிரூபித்தார்

## ஆத்மீக பலம் தராத கல்வி பயனற்றது

### பேராசிரியர் நந்தி உரை

யாழ்ப்பாணம், ஜூன்25

ஆத்மீக பலத்தை உயர்த்தாத— தொழிலுக்காக, உணவுக்காக கற்பிக்கப்படும் வெறும் ஏட்டுக்கல்வி வாழ்க்கைக்கு உதவாது இதனை கூறியதோடு மட்டும் நின்றுவிடாது அதனை நிரூபிக்கும் வகையில் வாழ்ந்து காட்டியவர் ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர்.

—இவ்வாறு யாழ் மருத்துவ பீட பேராசிரியர் திரு. செ. சிவஞான சுந்தரம் கூறினார்.

பேராசிரியர் ப. சந்திரசேகரம் எழுதிய 'ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸ தத்துவம்' எனும் நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு. வே. ந. சிவராஜா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் தொடர்ந்து உரையாற்றுகையில்—

ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்ஸர் ஒரு கல்விமானாக, தத்துவஞானியாக, முற்போக்குச் சிந்தனையாளராக, சமூகவியலாளராக வாழ்ந்து காட்டியவர் என்றார்.

சமூக ஒழுக்கத்தில் இருந்து பிறக்கும் சமூக சேவைக்குக் கூட, சமய ஒழுக்கமே அடிப்படையாக இருக்க வேண்டும் என்ற கருத்து இந்நூலில் விளக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் முதற் பிரதிகளை வழங்கினார்.

திரு. இரா. மகேந்திரசிங்கம் பதிலுரை வழங்கினார். (உ-ள)

## நிவாரண உணவு பெற பெர்மிட்

காங்கேசன்துறை, ஜூன்25

காங்கேசன்துறை கிராம சேவையாளர் பிரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கான விசேட நிவாரணப் படிவங்களைப் பெற்றவர்கள், நிவாரணப் பெர்மிட்டுகளை இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் கனிஷ்ட பாடசாலையில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

பெர்மிட் பெறவருபவர்கள் தங்களுடைய அடையாள கார்ட்டையும், கிராம சேவை அலுவலர் திரு. மு. கனகநாயகத்தினால் வழங்கப்பட்ட அட்டையையும் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். (உ-68)

## அமைதியான உற்சவம்

கொடிகாமம், ஜூன்25

உசன் கந்தசுவாமி கோவில் ஆண்டு மகோற்சவம் அண்மையில் மிக அமைதியாக ஆடம்பரமின்றி நடைபெற்றது. (உ-75)

## திறப்பு விழா

கிளிநொச்சி, ஜூன்25

வட்டக்கச்சி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் சுமார் 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சன சமூக நிலையக் கட்டடத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. தேவசிகாமணி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

விழாவில் கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு. சொ. அமிர்தலிங்கம், உதவித்திட்டமிடல் பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதன், தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் கே. துரைராசா, கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் கே. குணராசா, சமூகசேவை உத்தியோகத்தர் பொ. நித்தியானந்தன், காணி உத்தியோகத்தர் எஸ். வேலுப்பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஷெல்லினால் தகர்ந்த பதுங்கு குழி!

பலாலி, ஜூன் 25

கடந்த திங்கட்கிழமையன்று நள்ளிரவு 12 மணியளவில் இடைக்காடு மினி முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் குண்டுகளில் மூன்று அச்சுவேலி பத்தமேனயில் உள்ள ஒரு வீட்டின் பதுங்கு குழி மீது விழுந்து வெடித்ததினால் பதுங்குகுழி இடிந்து தகர்ந்தது.

மின் அத்தியட்சகரான திரு. நடராஜா என்பவரது வீட்டில் இருந்த பதுங்கு குழிக்கே இக்கதி ஏற்பட்டது.

பதுங்கு குழிக்கு மேலே அடுக்கப்பட்டிருந்த தென்னம் குற்றிகள் முறிந்தும், மண் மூடைகள் சிதைந்தும் பதுங்கு குழிக்குள் விழுந்து கிடந்தன.

பத்தமேனப்பகுதியில் மேலும்பத்துக்கும் மேற்பட்ட ஷெல் குண்டுகள் அன்றைய தினம் விழுந்து வெடித்தன. இதனால் மூன்று வீடுகளும் சேதமடைந்தன. (உ-119)

தனியாகப் பிரிந்து சென்ற

## கோபத்தில் மனைவியை கொலை செய்த கணவன்

### கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூன் 25

கோபித்துக் கொண்டு பிரிந்து சென்றிருந்த மனைவியை தனியாகக் கூட்டிச் சென்று கொலை செய்தாராம் கணவன்.

இந்தச் சம்பவம் கடந்த 11 ஆம் திகதி அதிகாலை கிளிநொச்சி இரத்தினபுரம் என்னும் இடத்தில் நடந்துள்ளது.

இந்தமரணம் தொடர்பாக கிளிநொச்சி பதில் நீதிவான் திரு. வி. எஸ். சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணை நடைபெற்றது.

மரணமானவர் சம்பவத்திற்கு சுமார் ஒரு மாத காலத்தின் முன் கணவருடன் கோபித்துக் கொண்டு தனது நான்கு பிள்ளைகளுடன் பிரிந்து சென்று சுன்னாகத்தில் உள்ள தனது உறவினர்களுடன் வசித்து வந்ததாகவும்

சம்பவ தினத்திற்கு முதல்நாள் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக இரத்தினபுரம் வந்து தனக்குத் தெரிந்த அயலவர் ஒருவரின் வீட்டில் இரவு தங்கியிருந்ததாகவும்—

அவ்வேளை அவரது கணவர் அந்த வீட்டுக்கு வந்து மனைவியை இழுத்துச் சென்றதாகவும்—

பின்னர் காலை மனைவி இறந்துள்ளதாகவும் தகவல் வெளிவந்ததாகவும் சாட்சியங்கள் மூலம் தெரிய வந்தது.

சாட்சியங்களை இராமநாதபுரம் கிராம சேவகர் எஸ். இராசேஸ்வரன் நெறிப்படுத்தினார்.

பிரேத பரிசோதனையை கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி திரு. எஸ். சத்தியசீலன் மேற்கொண்டார். அதிர்ச்சியினாலும் மூச்சுத் திணறலினாலும் ஏற்பட்ட மரணம் என அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் கொலை எனத் தீர்ப்பளித்த நீதிவான், இது தொடர்பாக தலைமறைவாகியுள்ள இறந்தவரது கணவரைத் தேடிக் கண்டு பிடித்து நீதிமன்றத்தின் முன் நிறுத்துமாறு உத்தரவிட்டார். (உ-76)

## வவுனியாவிலிருந்து இப்போது உணவுப்பொருள்

வவுனியா, ஜூன் 25

யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கான உணவுப் பொருள்கள் வவுனியா உணவுக் களஞ்சியத்தில் இருந்து விநியோகிக்கப் படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் தமக்கு தேவையான அரிசி, மா போன்ற உணவுப் பொருள்களை வவுனியாவிற்குச் சென்று ஏற்றி வந்து பாவனையாளர்கட்கு வழங்குகின்றன.

"காங்கேசன் துறையில் உள்ள அரச உணவுக் களஞ்சியத்தில் இருந்து தேவையான உணவுப் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம்" என யாழ்ப்பாண வானொலி பல்வேறு விதமான அறிவித்தலை ஒலிபரப்பிய போதிலும் காங்கேசன்துறைக்கு வாகனங்கள் பாதுகாப்பாகச் சென்றுவர முடியவில்லை.

இதனால்யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்மற்றும் யாழ். மாவட்ட உணவுக் கட்டுப்பாட்டு ஆணையாளர் ஆகியோர்எடுத்த நடவடிக்கையினால் வவுனியா உணவுக் களஞ்சியத்தில் இருந்து யாழ். மாவட்டத்திற்கான உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. (அ-11)

## எதிரணிகள் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 25

அவசர காலச் சட்ட நீடிப்பு பிரேரணையை விவாதிக்க கூடுதல்நேரம் ஒதுக்கும்படி எதிர்க்கட்சியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமை பற்றி முக்கிய பிரச்சினைகளை எழுப்பஎதிர்க்கட்சியினர் தீர்மானித்துள்ளனர்.

எதிர்க்கட்சியினருக்கு கூடுதல் நேரம் ஒதுக்கும் கோரிக்கையை அத்தனகலை எம். பி. லக்ஷ்மன் ஜயக்கொடி சபாநாயகரிடம் விடுத்திருக்கிறார். (உ-எ)

## பாஸ்போர்ட்டிற்கான விண்ணப்பப் படிவம்: நகரில் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ்ப்பாணத்தில் பாஸ்ப்போர்ட் விண்ணப்பப்படிவங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ் பிராந்திய பாஸ்போர்ட் அலுவலகத்தில் பல மாதங்களாக விண்ணப்பப் படிவங்கள் இல்லாததால் பொதுமக்கள் படிவங்களை வெளியே அதிக விலைக்கு வாங்க வேண்டியதாக இருக்கின்றது.

அரசு இராணுவ கெடுபிடிகள் இறுக்கப்பட்டதையடுத்து பலர் வெளிநாடுகளுக்குச் செல்ல முயற்சிப்பதால் வெளியிலும் அதிகவிலை கொடுத்து விண்ணப்பப் படிவங்களை வாங்க முடியாதிருக்கின்றது. (உ-ள)

## வயோதிபமாது சுட்டுக்கொலை!

திருகோணமலை, ஜூன்25

ஐம்பத்தைந்து வயதான செல்லாச்சி என்ற வயோதிபமாது மூதூரில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

மூதூரில் 4ஆம் வலது கரை வாய்க்கால் பகுதியில் உள்ள அவரின் வீட்டில் வைத்தே இனந்தெரியாதவர்களினால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பொலீஸில் முறையிடப்பட்டுள்ளது. (உ-எ)

# சிறைச்சாலை கொலைக்களமா?

## தீர்ப்பில் யாழ் நீதிவான் கிளப்பிய கேள்வி

யாழ்ப்பாணம், ஜூன் 25

விளக்கமறியலிலுள்ள சந்தேக நபர்களின் உயிருக்குச் சிறைச்சாலையில் எவ்வித பாதுகாப்பும் இல்லை என்பது மட்டுமல்லாமல் மன்றினால் பாதுகாப்பிற்காகச் சிறைச்சாலைக்கு அனுப்பப்படும் கைதிகள் கொலைக்களத்திற்கு அனுப்பப்படுவதுபோல் கருத இடமுண்டு.

சிறைச்சாலையைக் கொலைக்களமாகமாற்றி, கொலைஞர்கள் தப்பித்துக்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடம் கொடுக்கக்கூடாது.

— இவ்வாறு யாழ் நீதிவான் திரு. க. கதிரவேலுபிள்ளை கொலை வழக்கொன்றின் முதற்கட்ட விசாரணையின்பின் தீர்ப்புக்கூறுகையில் தெரிவித்தார்.

1982ஆம் ஆண்டு ஏப்பிரல் 15ஆம் திகதி யாழ் மறியற்சாலையில் கைதியாகவிருந்த உடுவில் வாசியான — பெருமாள் குலசிங்கம் கொலைசெய்யப்பட்டது தொடர்பான வழக்கின் முதற்கட்ட விசாரணைத் தீர்ப்பு கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கப்பட்டது.

காலஞ்சென்றவர் 1982ஆம் ஆண்டு ஏப்பிரல் 14ஆம் திகதி மறியற்சாலையிலிருந்து தப்பியோடியபின்னர் மீண்டும் உடனடியாகக் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மறுநாள் 15ஆம் திகதி யாழ் மறியற்சாலையில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட அவர் வைத்தியசாலையில் மரணமானார்.

இவ்வழக்கில் மறியற்சாலை ஊழியர்களான பொன்னம்பலம் பொன்னுத்துரை, யோகநாயகம் றெஜினோல்ட் மென்டிஸ், சாமுவேல் வோல்ட்டர் ஜெயராசா, கந்தையா பாலசுந்தரம்ஆகியோர்மீது பொலீஸார் குற்றஞ்சாட்டியிருந்தனர்.

1ஆம், 3ஆம் எதிரிகள் மட்டுமே தொடர்ந்து சகல தவணைகளுக்கும் சமுகளித்திருந்தனர்.

### பொலீஸார் அசிரத்தை

நீதிவான் தமது தீர்ப்பில் மேலும் கூறியதாவது:-

இக்கொலை சம்பந்தமான விசாரணையில் யாழ் பொலீஸார் போதிய அக்கறைகாட்டி விசாரிக்கவில்லை என்று கருத இடமுண்டு.

அத்துடன் பொலீஸ் சாட்சியங்களே இவ்வழக்கு விசாரணைக்குச் சாட்சியமளிக்க வராததிலிருந்து கொலை சம்பந்தமான பாரிய குற்றங்களைக்கூட பொலீஸார் உதாசீனம் செய்கின்றனர் என்று தெரிகின்றது.

எனவே இவ்வழக்கிலுள்ள 1ஆம, 3ஆம் எதிகளுக்கு எதிராகத் தொடர்ந்தும் விசாரணை செய்வதில் எவ்வித பயனுமில்லை என்பதாலும்—

விசாரணை தொடர்பாக பொலீஸ் போதிய அக்கறை காட்டாததாலும் — சாட்சிகள் இவ்விசாரணைக்கு சமுகம் அளிக்காததாலும் —இரு சாட்சிகள் மரணமடைந்திருப்பதாலும் — மற்றவர்கள் எங்கே உள்ளார்கள் என்று தெரியாததாலும் —

மீண்டும் மீண்டும் தவணை போடுவது எதிரிகளுக்கு அநீதி செய்வதாக முடியும் எனக் கருதுவதாலும்—

1ஆம் 3ஆம் எதிரிகளை விடுதலை செய்கிறேன்.

பொலீஸார் மீண்டும் வழக்குத் தாக்கல் செய்ய விரும்பினால் தாக்கல் செய்யலாம் என்றும் தீர்ப்பளிக்கிறேன்,

இவ்வாறு நீதிவான் தமது தீர்ப்பில் குறிப்பிட்டார்.

இவ்வழக்கில் பொலீஸாரால் குறிப்பிடப்பட்டிருந்த 16 சாட்சிகளில் மூவர் மட்டுமே மன்றுக்கு வந்தனர் மற்றவர்களுக்கு பிடிவிறாந்து அனுப்பியும் அவர்கள் நீதிமன்றத்திற்கு சமுகம் தரவில்லை. (உ-ள)

## துயருறும் அகதிகளுக்கு உதவ ஆசிரியர்களிடம்

### கல்வி அதிகாரி வேண்டுகோள்

மானிப்பாய், ஜூன்25

துயருறும் அகதிகளுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிலையத்தினூடாக ஆசிரியர்கள் அனைவரும் உதவி அளிக்க முன்வரவேண்டும்.

—இப்படி மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் இப்பகுதி ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வித் திணைக்கள ஊழியர்கள் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

அகதிகள் புனர்வாழ்வு நிதியத்தை சேர்ந்த உறுப்பினர்கள் யாழ்ப்பாணம் கல்விப்பணிப்பாளரிடம் விடுத்த வேண்டுகோளைத்தொடர்ந்துஇந்நிதிக்கு உதவ நடவடிக்கை எடுக்குமாறு வட்டார கல்வி அதிகாரிகளுக்கு பணிக்கப்பட்டது.

கல்வித் திணைக்களம் பாடசாலைகள் தோறும் நிதி சேகரித்து, கல்வித் திணைக்கள ஊழியர்களிடம் இருந்து பெறும் நிதியையும் சேர்த்து துயருறும் அகதிகளுக்கு வழங்க முடிவு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-90)

## பிரசைகள் குழு உதவி

முள்ளியவளை, ஜூன் 25

வடமராட்சியிலிருந்து இடம் பெயர்ந்து வந்து முல்லைத்தீவில் தங்கியிருக்கும் சுமார் 250 குடும்பங்களுக்கும் முல்லைத்தீவுப் பிரசைகள் குழு கடந்த திங்கட்கிழமையன்று தமது காரியாலயத்தில் வைத்து அரிசி, மா, சீனி, தேயிலை போன்ற உணவுப் பொருட்களை வழங்கியது. (உ-93)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

25 - 06 - 1987



செல்வி சிவசம்பு - கோடீஸ்வரி

மலர்வு: 04 . 08 . 1968 உதிர்வு: 06 . 07 . 1986

அன்னை என்ற அழகுச் செடிதான்
வளர்த்தது – அது
தன்னைமறந்து பெற்றது பார்
பாசமலர்களை
முன்னம் மலர்ந்த மலர்களெல்லாம்
கதிகலங்க
பின்னம் வந்த தங்கமொட்டு
ஏன் பிரிந்தது – அது
முகையவிழ்த்து மலருமுன்னம்
ஏன் மறைந்தது – எங்கள்
எண்ணத்திலே இந்த இடி ஏன் வீழ்ந்தது?
இதயமென்னும் கலசமெல்லாம்
பொறி கலங்கவே
இளையவளே! இனியவளே!!
எங்கள் கோடீசே!!!
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
உன் பிரிவால் துயருறும்

**ஐயா, அம்மா, சகோதர சகோதரிகள், அத்தான்மார், பெருமக்கள், நண்பர்கள்**

(சபா - சிவா)

நாவலர் வீதி, நெடுங்கேணி. (1438)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

உண்மை எப்போதும் வெல்லும். முடிவு நன்மையாகவே அமையும் என்ற நம்பிக்கை எப்பொழுதும் இருக்கவேண்டும்.

— காந்தி அடிகள்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
24.6.1987 த.பெ.இல: - 23

## வருக, வருகவே!

கண்டியில் ஆண்ட பரராஜசிங்க மன்னன் காலத்தில் சுடும் பஞ்சம் வந்தது. தமது மக்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்றுமாறு அவன் தமிழகத்துச் செல்வந்தரும், பெரும் வள்ளலுமான சடையப்பரிடம் வேண்டுகோள் விடுத்தான். மன்னனின் விண்ணப்பத்தைக் கண்ட சடையப்ப வள்ளல் நெல் அனுப்பி இலங்கை மக்களின் பட்டினிச் சாவைத் தடுத்தார். ஈழ மன்னனால் தருமதேவதை என வர்ணிக்கப்பட்டார் அந்தத் தமிழகத்து வள்ளல். இ . சரித்திரம்.

அன்று இலங்கை கேட்டுக் கிடைத்தது இந்திய உணவுப் பொருள். இன்று கேட்காமலே, பட்டினியால் வாடும் ஈழத்தமிழர் நிலை கண்டு, தானகவே உணவுப் பொருள்களையும், மற்றும் மருந்து, துணிவகை போன்ற நிவாரணப் பொருள்களையும் இன்று தருகிறது இந்தியா.

இந்தியா புண்ணியபூமி. அறம் வளர்க்கும் பூமி. அறத்தின் பாற்பட்டு பட்டினியிலிருந்து மக்களைக் காப்பாற்ற நிவாரணப் பொருள்களை அனுப்பியிருக்கிறது. மனித நேயத்தின் பாற்பட்டு, மனிதாபிமானத்தின் பாற்பட்டு உதவி செய்கிறது. இது, காலம் அறிந்து செய்யும் உதவி. அது ஞாலத்தின் மிகப்பெரிய உதவி.

இந்தியாவின் அடையாள நிவாரணப் பொருள்கள் இம்மாதம் நான்காம் திகதி யாழ்ப்பாண மக்களுக்குக் கிடைத்தன. வான ஊர்தியில் வந்து தேவர்கள் வார்த்த தேவாமிர்தமாக யாழ்ப்பாண மக்கள் அவற்றைக் கருதினர்கள். ஆம். ஈழத் தமிழர்களை என்றும் காப்பதற்கு ஓர் சக்தி உண்டு. அந்தச் சக்தி இந்தியா. தமது அல்லல்களைக் களைய வல்ல அபயக் கரத்திலிருந்து அந்தப் பொருள்கள் போடப்பட்டதாக யாழ்ப்பாண மக்கள் கருதினர்கள்.

அடையாள நிவாரணப் பொருள்களை விட ஆயிரம் மடங்கு (6500 தொன்) பொருள்களை இந்தியா ஈழத் தமிழர்களுக்கு அனுப்பப்போகிறது. அதில் முதற் பகுதியை ஏற்றிக்கொண்டு முதலாவது கப்பல் இன்று காலை காங்கேசன்துறை வருகிறது.

இந்தியாவின் இந்த உதவிக்கு ஈழத் தமிழர்கள் நன்றி தெரிவிக்கிறர்கள். இந்தச் செய் நன்றியை ஈழத்தமிழினம் வாழும்வரை என்றென்றும் மறக்காது.

ஈழத் தமிழர்களை ஸ்ரீலங்கா அரசு பட்டினி போட்டுச் சாகடிக்க முயன்றால், இந்தியா அதைப் பார்த்துக் கொண்டிருக்காது. தமிழர்கள் செத்தொழிய அது அனுமதிக்காது என்பதற்கு இது ஒரு முன்னுதாரணம். இது ஸ்ரீலங்கா அரசுக்கு ஒருபாடம்.

பட்டினியால் சாக விடாமல் தடுப்பது போலவே, ஆயுதத்தால் சாகாமல் தடுக்கவும் இந்தியா முன்வர வேண்டும் என்று ஈழத்தமிழர்கள் எதிர்பார்க்கிறர்கள்.

வயிற்றுப் பசி போக்குவதற்கு உதவியது போலவே, உயிர்ப் பாதுகாப்புக்கும் இந்தியா உதவும் என அவர்கள் எதிர்பார்க்கிறர்கள். தங்கள் அரசியல் உரிமைகளையும், அதற்கான பாதுகாப்புகளையும் பெற்றுத் தரவும் அது உதவ வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறர்கள்.

தங்கள் அரசியல் அபிலாஷைகள் குறைவின்றிக் கிடைப்பதற்கு, தமது உரிமைப் போராட்டத்தை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என விரும்புகிறர்கள். இவ்விடயத்தில் இந்தியா கால்கோள் இட்டால் தான் காரியம் கைகூடும் என்று நம்புகிறர்கள். இந்தியா முன்னுதாரணம் காட்டினல் இதர நாடுகள் பின்பற்றும் என அவர்கள் எதிர்பார்க்கிறர்கள்.

கிராமங்கள், நகரங்கள் என்றும், ஆலயங்கள், சனசமூக நிலையங்கள் என்றும் உரிமைப் போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரி மக்கள் நடத்தி வரும் எழுச்சி நிகழ்ச்சிகள் முன் சொன்னவற்றையே பிரதிபலிக்கின்றன.

உரிய நேரம் வந்து உணவிட்டு
உயிர் காக்கும் இந்தியாவே!
உலகம் உள்ளளவும் உனை மறவோம்
உளத்தால் வாழ்த்தி வரவேற்கின்றோம்.
நன்றி!

—என்று ஈழத் தமிழர்கள் இன்று வரும் இந்தியக் கப்பல்களை வரவேற்கிறர்கள்.

## போபாலில்மீளவும்வாயுக்கசிவு

போபால், ஜூன் 24

போபாலில் அமோனியாத் தொழிற்சாலை ஒன்றில் இருந்து வாயுக் கசிவு ஏற்பட்டதாகக் கூறப்பட்டதை தொடர்ந்து போபாலில் பெரும் பதற்றமும் பீதியும் நிலவியது.

பெரும் பாலானேர் அவசரம் அவசரமாக போபாலை விட்டு ஓடித் தப்ப முயன்றனர்.

இந்த வாயுக்கசிவில் ஒரு பெண் உயிரிழந்தார்.

1984 டிசம்பரில் ஏற்பட்ட போபால் விஷ வாயுக் கசிவில் சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பதுதெரிந்ததே. (உ-எ)

# பிஷப் டுட்டு மீது வழக்கு

கேப்டவுன், ஜூன் 24

அவசர காலச் சட்ட விதிகளை மீறியதற்காக பிஷப் டுட்டு மீது வழக்குத் தொடருவது குறித்து தென் ஆபிரிக்க அரசு ஆலோசித்து வருகின்றது.

தென் ஆபிரிக்க அரசின் நிறைவேற்றுமைக் கொள்கையை எதிர்த்து மொஸாம்பிக்கில் சடந்த வாரம் பிஷப் டுட்டு பேசினர்.

அப்பேச்சு, தென் ஆபிரிக்க அவசரகாலச் சட்ட விதிகளை மீறியதாக அமைந்து உள்ளது என்று பொலீஸார் அபிப்பிராயம் தெரிவித்து உள்ளனர்.

பிஷப்பின் பேச்சுப் பதிவு செய்யப்பட்ட விடியோ பிரதியை பொலீஸார் இப்போது ஆராய்ந்து வருகின்றனர்.

தென் ஆபிரிக்காவின் ஆங்கிலிக்கன் பிஷப்பான டுட்டு, அண்மையில் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-எ)

## இந்திரா காங்கிரஸில் உட்கட்சித் தேர்தல்

புதுடில்லி, ஜூன் 24

இந்திரா காங்கிரஸ் கட்சியின் பல அமைப்புக்களான நிர்வாகிகள், தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

சட்சியைப் பலப்படுத்தும் நடவடிக்கையாக இது அமையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சிபிளவுபட்டு இந்திரா காங்கிரஸ் உருவானது முதல் இதுவரை கட்சி அமைப்புக்களின் நிர்வாகிகளுக்கான தேர்தல் நடக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஹரியாண தோல்வியைத் தொடர்ந்து, கட்சி அமைப்புக்களுக்கான தேர்தல்களை உடன் நடத்துவது என்று கட்சி செயற்குழு அண்மையில் முடிவு செய்தது. (உ-எ)

### ராஜ்யசபை உறுப்பினர் தெரிவு

கல்கத்தா, ஜூன் 24

மேற்கு வங்க சட்ட சபை 6 ராஜ்யசபை உறுப்பினர்களை நேற்றுத் தெரிவு செய்தது.

இந்த அறுவரும் மாநிலத்தை ஆளும் மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத் தக்கது. (உ-எ)

### அமெரிக்க பாதுகாப்பு

வாஷிங்டன், ஜூன் 24

குவைத் நாட்டின் 13 எண்ணெக் கப்பல்களுக்கு பாதுகாப்பளிக்க அமெரிக்கா இணங்கியுள்ளது.

இக்சப்பல்கள் அனைத்தும் அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. (உ-எ)

## மேலதிகப் படைகள் டார்ஜீலிங் விரைவு

புதுடில்லி, ஜூன் 24

டார்ஜீலிங் மலைப் பிரதேசத்திற்கு மேலதிக பொலீஸ், இராணுவப் படைகள் அனுப்பப்பட்டுள்ளன.

கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணி நடத்தும் 13 நாள் வேலை நிறுத்தம் காரணமாக அப்பகுதியில் வன்செயல்கள் பெருமளவில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது.

அதை அடக்கவே மேலதிக படை அனுப்பப்பட்டது. (உ-எ)

### திரும்பவும் திவாரி சீன செல்வார்

இந்திய வெளியுறவு அமைச்சர் என். டி. திவாரி இவ்வாண்டு இறுதியில் மீண்டும் சீன செல்வார்.

சீன-இந்திய எல்லைத் தகராறு பற்றிய பேச்சுக்கள் அப்போது இடம் பெறும். (உ-எ)

## வெளி உலகில்

## ஐரிஷ் இராணுவம் தாட்சர் மீது குறி!

லண்டன், ஜூன் 24

ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் தாக்குதல் பட்டியலில் இன்னும் முதலாவது இடம் பிரிட்டிஷ் பிரதமர் மார்கரட் தாட்சருக்கே கொடுக்கப்பட்டுள்ளது.

ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் பேச்சாளர் ஒருவர் இதனை வெளியிட்டார்.

ஐரிஷ் இராணுவம் 1984 இல் பிரதமர் தாட்சரைக் கொலை செய்ய முயற்சித்தது.

அச்சம்பவத்தின் பின்னர் உலகிலேயே சிறந்த பாதுகாப்புப் பெற்றுள்ள தலைவராக திருமதி தட்சர் விளங்குகின்றார். (உ-எ)

### எல்லைத்தகராறு குறித்துப் பேச்சு

கௌஹாத்தி, ஜூன் 24

எல்லைத்தகராறுகள் குறித்து பிரதம செயலாளர் மட்டத்தில் பேச்சுக்களை நடத்த அஸாம், மிஸோரம் மாநில அரசுகள் முடிவு செய்துள்ளன.

முதலமைச்சர்கள் பிரபுல்லா மஹந்தா, லால் டெங்கா ஆகியவர்கள் நடத்திய மாநாட்டில் இம்முடிவுகள் எடுத்துள்ளன.

கட்சி மட்டத்தில் அஸாம் கணபரிஷத். மிஸோ தேசிய முன்னணி ஆகியவற்றின் உறவுகளை பலப் படுத்துவதென்றும் முடிவானது. (உ-எ)

## மின்னல் தாக்குண்ட பெண்ணின் சாதனை!

மாஸ்கோ, ஜூன் 24

மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான ஒரு பெண் ரஷ்யாவில் அதிசயம் புரிந்து வருகின்றர்.

ஜூலியா வெரொபியங் வயது 37. கிரேன் சாரதியாகப் பணியாற்றினர்.

1978 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இவர் மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கானர். 380 வோல்ட் சக்திகொண்ட மின்சாரம் இவரைத் தாக்கியது.

உக்ரேனில் உள்ள சுரங்கத்தில் இவ்விபத்து ஏற்பட்டது.

இறந்துவிட்டார் என்று எண்ணி ஜூலியாவை ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் போட்டுவிட்டார்கள்.

இரண்டு நாட்கள் கழித்து பிரேத பரிசோதனை நடத்த டாக்டர்கள் சென்றனர். உடலை டாக்டர்கள் வெட்டத் தொடங்க, ரத்தம் பீறிட்டது. ஜூலியா இறக்கவில்லை என்பது அப்போது தெரிந்தது.

ஆறுமாதங்கள் சிகிச்சையின் பின்னர் ஜூலியா வழமை நிலைமைக்குத் திரும்பினாள்.

ஒரு நாள் பஸ் நிலையத்தில் நின்ற ஒரு பெண்ணைப் பார்த்தாள். அந்தப் பெண்ணின் உடலினுள் உள்ள உறுப்புக்கள் எல்லாம் ஜூலியாவுக்குத் தெரிந்தன.

சூரியனின் ஒளிக்கதிர்களை சண் கூசாமல் பார்க்க முடிந்தது.

ஆனல் எப்போதும் தலைவலியாக இருக்கிறது என்று கூற அவள் தவறுவதில்லையாம்.

## ஷேக் சகோதரரின் சண்டை தீர்ந்தது

ஷார்ஜா, ஜூன் 24

ஷார்ஜாவின் ஆட்சி உரிமை குறித்து இரண்டு சகோதரர்களுக்கு இடையேயான கருத்து வேற்றுமை சமரசமாகத் தீர்த்து வைக்சப்பட்டன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் நெருக்கடி ஏற்பட்ட பின்னர் பதவி கவிழ்க்கப்பட்ட சுல்தான் ஷேக்மின் முகமது கஸாமியும் அவரைபதவி கவிழ்த்த ஷேக் அப்துல் அஸீஸும் நேருக்கு நேர் கடந்த செவ்வாய்க் கிழமை சந்தித்தனர்.

பதவி கவிழ்க்சப்பட்ட அண்ணனை மீண்டும் சுல்தானக நியமிக்கும் திட்டத்தைத் தம்பி ஏற்றுக் கொண்டார்.

தன்னைப் பதவி கவிழ்த்த தம்பியை முடிக்குரிய இளவரசராக அண்ணன் ஏற்றுக் கொண்டார். (உ-எ)

### தொழிலாளர், விவசாயிகளை ஆயுதபாணியாக்குவோம்:

# நாட்டைக் காக்க துணிச்சலான இடதுசாரித் தலைமை வேண்டும்

### நவசமசமாஜிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 25

வரப்போகும் ஆபத்திலிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு இந்தச் சூழ்நிலையில் ஒரு துணிச்சலான இடதுசாரித் தலைமை அவசியம் தேவைப்படுகிறது.

இன்றைய நிலையில் இந்த நாட்டு மக்களின் சுதந்திரத்தையும் இறைமையையும் காப்பாற்றுவதற்கு — இந்த ஏகாதிபத்திய அரசையும் அதன் கூட்டாளிகளையும் தூக்கி எறிந்துவிட்டு — ஒரு புரட்சிகர இடதுசாரி அரசாங்கத்தின்கீழ் தொழிலாளர்களையும் விவசாயிகளையும் ஆயுதபாணியாக்குவதே வழியாகும்.

— இப்படி நவசமசமாஜக் கட்சியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணரத்ன விடுத்த அறிகை ஒன்றில் தெரிவித்திருக்கிறர்.

ஜே. ஆரின் அரசாங்கம் இன்றைய சமூக பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு வழிகாண முடியாது தவிக்கின்றது. இராணுவ அடக்குமுறையின் மூலம் ஒரு போலியான அமைதியை உருவாக்கலாம் என இந்த அரசு எண்ணியது.

இங்கே அமைதியை உருவாக்கி அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்று கடந்த ஓராண்டுகாலமாக சர்வதேச நாணய நிதியம், உலகவங்கி, ஏனைய நிதி உதவி அளிக்கும் நாடுகளை நம்பவைக்க இந்த அரசினல் முடியவில்லை.

வடக்கினதும் தெற்கினதும் உள்ள குழப்ப நிலையை முடிவுக்குக் கொண்டுவர வேறு எந்த வழியும் இல்லாததால் ஜே. ஆர். இராணுவ வழிமுறையைக் கையாளத் தீர்மானித்தார்.

வடக்கில் இராணுவத்தின் அரக்கத்தனமான நடவடிக்கைகள் இளைஞர் இயக்கங்களை தென் பகுதியில் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வைத்தது.

இலங்கை இராணுவத்தின் மோசமான நடவடிக்கைகள் இந்திய உபகண்டத்தில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியது.

இதனல் இந்தியமக்கள் இந்தியத் தலைவர்களை இந்த நடவடிக்கைகளில் தலையிடும்படி நிர்ப்பந்தித்தனர்.

தீவிரவாத சிங்கள இளைஞர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் எல்லாப் பல்கலைக்கழக வளாகங்களையும் மூடச்செய்தன.

இந்த நேரத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை தடைசெய்வதற்கு எதிரான எதிர்ப்பு அதிகரித்துக் கொண்டு வருகிறது.

தோட்டத் தொழிலாளர்களையும் இந்த அரசாங்கம் கைது செய்தது. தற்போதைய சூழ்நிலை தொண்டமானைக் கூட ஜே. ஆருக்கு எதிராக பலம் வாய்ந்த வேலை நிறுத்தப் போராட்ட நடவடிக்கையில் ஈடுபடச் செய்திருக்கிறது.

ஜே. ஆருக்கு எப்போதும் மறைமுக ஆதரவைக் கொடுத்த இந்தியத்தலைவர்கள், இத்தகைய சூழ்நிலையில் தான் இந்திய மக்களினதும் குறிப்பாக தமிழ் நாட்டு மக்களினதும் பக்கம் சேரும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இந்தநேரத்தில் ராஜீவ் காந்தி தந்திரமான முறையில், மனிதாபிமான அடிப்படையில் நிவாரண தலையீட்டை மேற்கொண்டார்.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராளிகளை முற்றுமுழுதாகக் கைவிட்டால் அது இலங்கை மக்கள் அனைவரையும் ஒன்றுபட்ட போராட்டத்தில் ஈடுபட வழிவகுக்கும் என்பதால் அவர் இந்தத் தந்திரத்தை மேற்கொண்டார்.

ராஜீவ் காந்தியின் போலியான தலையீடு, போலியான எதிர்க்கட்சித் தலைவர்களை முற்று முழுதாக அம்பலப்படுத்தியது. அரசாங்கத்தை தலை கால் தெரியாமல் அனுரா பண்டாரநாயகா ஆதரித்ததால் உண்மை அம்பலத்துக்கு வந்தது. ஆபத்தில் இருந்த அரசாங்கத்தின் உண்மையான ஆதரவாளராக அனுரா மாறினர்.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

### இலவச படிவங்கள்

அச்சுவேலி, ஜூன் 25

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாதிக்சப்பட்டோர் நிவாரணப் பொருள்களைப் பெறுவதற்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்களை இலவசமாக அச்சிட்டு வழங்கியது. (உ)



**பொய்யாமொழி**

**குறள்:**

ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

**பொருள் :**

ஊக்கம் மிகுந்தவன் (காலத்தை எதிர் பார்த்து) அடங்கியிருத்தல், போர் செய்யும் ஆட்டுக்கடா தன் பகையைத் தாக்குவதற்காகப் பின்னே கால் வாங்கு தலைப் போன்றது.

## இந்திய நிவாரணம்; கம்யூ. கட்சி வரவேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25

முற்றுகையிடப்பட்டுள்ள யாழ் குடாநாட்டு மக்களுக்கு இந்திய நிவாரண உதவிகள் வழங்கப்படுவதுபற்றியும், விநியோகம்பற்றியும் இலங்கை இந்திய அரசுகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள உடன்பாட்டினை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ் மாவட்டக் குழு வரவேற்றிருக்கிறது.

ஐந்து மாதங்களுக்கும் மேலான பொருளாதார மற்றும் எரிபொருள் தடையானது யாழ்ப்பாணமக்கள்மேல் சொல்லொணுக் கஷ்டங்களைச் சுமத்தியிருந்தது.

நூற்றுக் கணக்கான வீடுகள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், வழிபாட்டிடங்கள் பல நாசமாக்கப்பட்டுள்ளன-

அண்மையில் நிறைவேற்றப்பட்ட அவசர காலவிதிமுறைகளைக்கூட மிஞ்சி ஆயிரக் கணக்கான இளைஞர்கள் தடுப்புக்காவலில் ஆண்டுக் கணக்காக அடைபட்டுக் கிடக்கிறர்கள்.

யாரோ செய்த காரியங்களுக்குப் பதிலடி கொடுக்குமுகமாக எடுக்கப்படும் நடவடிக்கைளால் ஆயிரக் கணக்கானமக்கள் கொல்லப்பட்டோ, உடல் ஊனமாக்கப்படவோ ஆளாகியுள்ளார்கள்.

இவ்வளவும் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது தமிழ் மக்களுக்கு நிவாரணம்தேவையில்லை என எவரேனும் புலம்புவார்களெனல் அவர்கள் தமிழின ஒழிப்பின் ஆதரவு சக்திகளாகவே நாம் கருதவேண்டும்.

இந்திய அரசு அண்மையில் எடுத்த நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தன் அனுதாபத்தைக் காட்டும் ஒரு மனிதாபிமான நடவடிக்கையேயாகும்— இப்படி கட்சியின் யாழ் மாவட்டக்குழு தெரிவித்திருக்கிறது. (உ)

## தனது அணுகுமுறையை இந்தியா மாற்ற வேண்டும் -- சமசமாஜிகள்

கொழும்பு, ஜூன் 25

ஸ்ரீலங்காவுடன் தற்போது கொண்ட நிலைப்பாடு, அணுகுமுறையை மாற்றிக் கொள்ளும்படி லங்கா சமசமாஜக்கட்சி இந்தியாவைக்கேட்டிருக்கின்றது.

கட்சிப் பொதுச் செயலாளர் பெர்னுட் திலகரத்தின கையொப்பமிட்டு விடுத்துள்ள அறிக்கையில் இப்படிக் கூறப்பட்டுள்ளது.

அறிக்கை வருமாறு;

ஸ்ரீலங்காவுடனன தற்போதைய அணுகுமுறை நிலைப்பாட்டை இந்தியா மாற்றிக் கொள்வது ஸ்ரீலங்காவிற்கு மட்டுமல்ல, இந்தியாவுக்குமே நன்மை பயப்பதாக அமையும்.

ஸ்ரீலங்காவில் உள்ள சமாதானம் விரும்பும் சக்திகள் வலிமை பொருந்திய அயல் நாடு ஒன்றுடன் மோதலுக்குச் செல்வதையும் இது தவிர்க்கும்.

இந்தியாவின் அண்மைக்கால இராணுவ அத்துமீறல் திட்டமிட்டுச் செய்யப்பட்ட பயமுறுத்தல் ஆகும்.

ஸ்ரீலங்கா தமிழர் பிரச்சினையில் தலையிட தமக்கு உரிமைஉண்டு என்று இந்தியா கருதுகிறது.

இது இருதரப்பினரும் ஏற்றுக் கொள்ளும் மத்தியஸ்தர் என்ற நிலையில் இருந்து தீர்வைத் திணிக்கும் ஒரு மத்தியஸ்தர் என்ற நிலைக்கு இந்தியா செல்கின்றதா என்ற கேள்வியை எழுப்பியுள்ளது.

அதே நேரத்தில், இந்தியா எடுத்துள்ள தீங்கிழைக்கும் அணுகுமுறை, நிலைப்பாடு குறித்து பதில் நடவடிக்கைகளை மிக அவதானமாக எடுக்கவேண்டும்.

இறைமையுள்ள ஸ்ரீலங்கா மண்ணில் உறுதியாக நின்று கொண்டு எம்மை எதிர்நோக்கியுள்ள மோதலுக்கு கௌரவமான முறையில் தீர்வு காணுவது முன்னுக்குப்பின் முரணனது அல்ல.

ஏற்கனவே விட்ட பிழையான வழிகளை மாற்றிக் கொள்ள ஸ்ரீலங்கா அரசை நிர்ப்பந்திக்கவும் கௌரவமான வழிகள் உள்ளன.

—இப்படி அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ராஜ் கோபால்ஸ்
(தற்காலிக இடம்மாற்றம், மயூராசென்ரர் உட்புறம்)
திருமண வைபவத்திற்கேற்ற பட்டுப் பிடவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# உதயன்

25 — 06 — 1987 வியாழக்கிழமை

சகலவித ஜவுளித் தெரிவுகளுக்கு
மயூரா சென்ரர்
ஆர். ஜி. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## நான் தயாராக இருக்கிறேன்:
# எப்படியும் முயன்று பிரபாவை பேச்சுக்குக் கூட்டி வாருங்கள்
## கொழும்பு இந்துக்களிடம் ஜே. ஆர். கோரிக்கை

கொழும்பு, ஜூன் 25
முயற்சி எடுத்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.



ஜே. ஆர்

பிரபாகரனை பேச்சுக்கள் நடத்த அழைத்து வாருங்கள். அவருடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றேன்.

— இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன, தன்னை கடந்த திங்கட்கிழமை மாலை சந்தித்த கொழும்பு இந்து பிரசைகள் குழுவிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் வேண்டுகோளை அடுத்து இக்குழு இரண்டாவது தடவையாக அவரைச் சந்தித்தது.

அப்போது தூதுக்குழு, வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் போது இடம்பெற்ற சம்பவங்களை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தது.

ஆயிரம் பொதுமக்கள் வரையில் இராணுவ நடவடிக்கையில் கொல்லப் பட்டனர் என்று தூதுக்குழு ஜனாதிபதியிடம் தெரிவித்தது.

விமானத் தாக்குதலின் போது பொதுமக்கள் கொல்லப்பட்டமை குறித்து ஜனாதிபதி தூதுக்குழுவிடம் கவலை தெரிவித்தார்.

இராணுவ நடவடிக்கை தொடர்ந்து நடைபெறும் வரை இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படாது. விமானத் தாக்குதல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் — இப்படித் தூதுக்குழு ஜனாதி



பிரபா

பதியைக் கேட்டுக் கொண்டது.

இச் சந்திப்பின் போது கூட்டுப்படைத் தளபதி சிறில் ரணதுங்க, இராணுவத் தளபதி நளின் செனவிரத்ன, அமைச்சுச் செயலாளர் சேபால ஆட்டிகல, அமைச்சர் சாகுல் ஹமீது ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-எ)

### ஏழு பேர் பலி

சென்னை, ஜூன் 25
தமிழ்நாட்டில் திண்டுக்கல்லில் நடந்த வீதிவிபத்தில் ஏழு பேர் உயிரிழந்தனர். ஐந்து பேர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் நேற்று (புதன்) இடம் பெற்றது. (உ-எ)

### இலக்கிய சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 25
திரு. டொமினிக் ஜீவாவின் மணி விழா சிறப்புநிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளபோதிலும், அவரின் 60 ஆவது பிறந்ததினமான எதிர்வரும் சனிக்கிழமையன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் அவருக்குப் பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிப்பதற்காக இலக்கிய நண்பர்களின் சந்திப்பு ஒன்றை ''மல்லிகை'' ஜீவா மணி விழாக்குழுவும், இலங்கை சம்பன் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

நாட்டின் நிலைமை, தபாற் சேவைச் சீர்குலைவு காரணமாக தனிப்பட்ட அழைப்புகள் அனுப்ப முடியாமல் இருப்பதாகவும், இலக்கிய நண்பர்கள் எல்லோரையும் இந் நிகழ்ச்சிக்குச் சமுகம் தருமாறும் அமைப்பாளர்கள் கோரி உள்ளனர். (உ)

### சென்ஜோன் அம்புலன்ஸ் பிரதிநிதிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25
இன்று வரவுள்ள இந்திய நிவாரணக் கப்பல்களை வரவேற்கச் செல்லும் அரச அதிபர் தலைமையிலான குழுவில், சர்வதேச சென்ஜோன் அம்புலன்ஸ் பிரிவின் யாழ் கிளை உறுப்பினர்கள் ஆறுபேரும் அடங்குவர்.

அவர்களின் பெயர்கள் வருமாறு:-

மாகாண ஆணையாளர் திரு. ஆர். எஸ். இன்னாசித்தம்பி, கோப்பாய்ப் படை அத்தியட்சகர் திரு. கிருஷ்ணராஜா, மாகாண நிர்வாக நிறைவேற்று உத்தியோகத்தர் திரு. எஸ். செல்வராஜா, யாழ். படை அத்தியட்சகர் திரு. என். நகுலராஜ், மாகாண தாதியர் நிறைவேற்று உத்தியோகத்தர் திருமதி அந்தோனியா சாமிநாதன், பிரதேச தாதியர் பிரிவு அத்தியட்சகர் திருமதி ஜே. இன்னாசித்தம்பி. (உ-ள)

## ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை:
# பரீட்சை நிலையங்களை மாற்றுவதற்கு அனுமதி

மானிப்பாய், ஜூன் 25
எதிர்வரும் ஆகஸ்டில் நடைபெறும் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையின் போது வடபகுதி மாணவர்கள் தாம் விரும்பும் பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

அதற்கு ஏற்றவாறு தமது பரீட்சை நிலையங்களை அவர்கள் மாற்றிக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த ஏற்பாடுகளைச் செய்வதற்கு கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. எல். விஜயமான இணக்கம் தெரிவித்துள்ளார்.

வடமாகாண அதிபர்கள் சங்கத் தலைவர் திரு. கே. அருணாசலம் கடந்த திங்கட்கிழமை கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்தித்து யாழ்ப்பாண குடாநாட்டில் ஏற்பட்டுள்ள கல்விநிலைப் பாதிப்புக்கள் குறித்து எடுத்துரைத்தார்.

இச் சந்திப்பின்போதே அமைச்சின் செயலாளர் பரீட்சை நிலைய மாற்றத்திற்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க சம்மதம் தெரிவித்தார்.

இந்த அடிப்படையில் தமது பரீட்சை நிலையங்களை மாற்ற விரும்பும் பரீட்சார்த்திகள் பற்றிய விவரங்களைத் தமக்கு அனுப்பி வைக்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஆகவே இத்தகைய மாற்றங்களைச் செய்ய விரும்புவோர் அது குறித்து வடமாகாண கல்விப் பணிப்பாளரிடம் அல்லது வடமாகாண அதிபர்கள் சங்கச் செயலாளரும், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அதிபருமான திரு. பி. கே. இராசரத்தினத்திடம் அதுபற்றி அறிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வடமாகாண அதிபர்கள் தூதுக்குழு ஒன்று மீண்டும் அடுத்த வாரம் குடாநாட்டு மாணவர்கள் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்கு கல்வி அமைச்சரைச் சந்திக்கவுள்ளதாகத் தெரியவருகிறது. (உ-90)

### தாக்கல்

இந்திய ஜனாதிபதி பதவிக்கு 72 பேர் வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்திருக்கின்றனர்.

## வடக்கு, கிழக்கில் எம். பிக்களை தெரிய தேர்தல் நடக்குமாம்
### வர்த்தமானி மூலம் அறிவிப்பு

கொழும்பு ஜூன். 25
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காலியாக உள்ள நாடாளுமன்றத் தொகுதிகளுக்கு இடைத் தேர்தல்கள் நடத்தப்படும்.

நியமனப் பத்திரங்கள் அடுத்த மாதம் 15ஆம் திகதி சம்பந்தப்பட்ட கச்சேரிகளில் ஏற்றுக் கொள்ளப்படும்.

இப்படி விசேட வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் சென்ற 19ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இடைத் தேர்தல்கள் நடத்தப்படவுள்ள தேர்தல் தொகுதிகள் வருமாறு;

**வடமாகாணம்**

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, வட்டுக்கோட்டை, மானிப்பாய், ஊர்காவற்றுறை, காங்கேசன்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு.

**கிழக்கு மாகாணம்**

திருகோணமலை, பட்டிருப்பு

பிரிவினை கோருவதைத் தடை செய்யும் ஆறாவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து இத் தொகுதிகளைப் பிரதிநிதித்துவப் படுத்திய தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்கள் அனைவரும் பதவி இழந்தனர் என்பது தெரிந்ததே. (உ-எ)

### ஜே. ஆர், ----

(1ஆம் பக்க தொடர்ச்சி)

க்கும் இரகசிய ஒப்பந்தம் ஒன்று ராஜீவுக்கும் ஜே. ஆருக்கும் இடையே உள்ளது.

-இப்படி அந்தப் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய அரசுக்கு எதிராகப் படையினர் அனைவரையும் மக்கள் விடுதலை முன்னணியின் கீழ் அணிதிரளும்படி அத்துண்டுப் பிரசுரத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

கட்டுநாயக்கா விமான தளத் தாக்குதலில் உயிரிழந்த விமானப் படையினருக்காக ஆழ்ந்த அனுதாபமும் அந்தத் துண்டுப் பிரசுரத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-ஜ-எ)

# நாணயமதிப்பை குறைக்குமாறு சிபாரிசு

கொழும்பு, ஜூன் 25
நாணய மதிப்பைக் குறைக்கும்படி உலக வங்கி ஸ்ரீலங்காவுக்கு சிபாரிசு செய்துள்ளது

அப்படிச் செய்வதன் மூலம் ஸ்ரீலங்காவின் உற்பத்திப் பொருள்களுக்கு சர்வதேச சந்தையில் கிராக்கி ஏற்படும் என்றும், நிதி நிலைமையைச் சமாளிக்கக் கூடியதாக இருக்கும் என்றும் உலக வங்கி தெரிவித்து உள்ளது.

ஸ்ரீலங்கா பொருளாதாரம் பற்றி வெளியிட்ட அறிக்கை ஒன்றில் உலக வங்கி இதனைத் தெரிவித்து உள்ளது. (உ-எ)

### பாதிப்புற்ற மாணவர் விவரம் சேகரிப்பு

வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் போது வலிகாமம் வடக்கு. கிழக்குப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் பற்றிய விவரம் சேகரிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவர் பாதிப்பை உறுதிப்படுத்தி சகல விவரங்களையும் இம் மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் யாழ். பல்கலைக்கழக அகதிகள் புனர்வாழ்வு அமையத்துக்கு சமர்ப்பிக்கும்படி கோரப்பட்டுள்ளனர்.

அமையத் தலைவர் திரு. ரி. அருணன் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## நாம் போர் புரியவில்லை ஆகவே நிறுத்தம் ஏன்?
### சேபால ஆட்டிகலவின் கேள்வி

கொழும்பு, ஜூன் 25
நாம்ஒருவருடனும் யுத்தம் நடத்தவில்லை. எனவே யுத்த நிறுத்தம் பற்றிய தேவை ஏற்படவில்லை.

— இப்படி பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிகல தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தன்னிச்சையாக அறிவித்த யுத்த நிறுத்தம் பற்றி கருத்து வெளியிடுகையில் அமைச்சுச் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய உணவுக் கப்பல்கள் காங்கேசன் துறை வந்ததில் இருந்து உணவுப் பொருள்கள் விநியோகம் செய்யப்படும் வரை யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படும் என்று புலிகள் இயக்கம் ஏற்கனவே அறிவித்தது தெரிந்ததே. (உ-எ)

## எதிரணி எம். பிக்களை இராஜினாமாச் செய்ய ல. ச. ச. க. கோரிக்கை

கொழும்பு, ஜூன் 25
தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுளை நீடிக்கச் செய்யும் தந்திரமாகவே உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. இத்தந்திரத்தை முறியடிக்க எதிர்க்கட்சி எம் பிக்கள் நாடாளுமன்றத்தில் இருந்து இராஜினாமாச் செய்ய வேண்டும் -

- இப்படி லங்கா சமசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் கட்சி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல்களில் கட்சி போட்டியிடுமா என்பது பற்றி அறிக்கையில் ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. (உ-எ)

எங்கள் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் எமது சேவையை 24 - 06 - 1987 முதல் ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

ராஜ் மஹால்
(சைவாள் கபே)
53, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(3211)

## மாணவர்கள் உண்ணாவிரதம்

மானிப்பாய், ஜூன் 25
தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி தொடர்ச்சியாக கிராமம் தோறும் நடைபெற்று வரும் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தின் கீழ், யாழ்ப்பாண பாடசாலைகளைசேர்ந்த பலமாணவ, மாணவிகள் நேற்று அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, திருக்குடும்ப கன்னியர் மடத் தமிழ், ஆங்கில பாடசாலைகள், கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் நேற்றைய அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கு பற்றினர்.

தமிழீழப் போராட்டத்தைஅங்கீகரிக்குமாறு கோரும் பல சுலோக அட்டைகளை இவர்கள் ஏந்தியபடி உண்ணாவிரதத்தில் பங்கு கொண்டனர்.

மாணவர்களின் இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் தொடர்ச்சியாக பல்வேறு இடங்களிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (உ-90)

### இடைக்காடு--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஹெலிக்கொப்டர்கள் மாறி மாறி அச்சுவேலிப் பகுதியில் மோசமான தாக்குதல்களை மேற் கொண்டன.

## தமிழ் மக்கள் பட்டினி.....

(1ஆம் பக்க தொடர்ச்சி)

ஆரவாரத்துடன் வழி அனுப்பி வைத்தனர்.

''ஜலண்ட் பிறைட்'' என்ற கப்பல் நிவாரண உதவிப் பொருள்களுடன் நேற்றுக் காலை சரியாக 11-25 க்கு காங்கேசன் துறை நோக்கி புறப்பட்டது.

**சாதனை**

உணவுப் பொருள்கள் அனைத்தும் 19 மணித்தியாலங்களில் கப்பலில் ஏற்றப்பட்டன. இது ஒரு சாதனை என்று கூறப்பட்டது.

இக்கப்பலுடன் 'ஸ்ரீவத்சவ' என்ற பயணிக் கப்பலும் வருகிறது. இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள், இந்திய மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர்களும் பயணிக் கப்பலில் வருகின்றனர்.

நேற்றுப் புறப்பட்ட உணவுக் கப்பலுடன் வரும் பயணிகள் கப்பலில் இந்திய உணவுக் காப்பரேஷன் நிர்வாக இயக்குநர் மோகன்தாஸ் மோஸஸும் பயணம் செல்கின்றார்.

இரண்டு கப்பல்களையும் செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாடு மாநிலத் தலைவி திருமதி சரோஜினி வரதப்பன் வழியனுப்பி வைத்தார். இவர், காலஞ்சென்ற முன்னாள் முதலமைச்சர் எம். பக்தவத்சலத்தின் மகளாவார்.

**அரச அதிபர் தலைமையில் குழு**

இந்தியக் கப்பல்களை வரவேற்று, பொருள்களை கையேற்க அரச அதிபர் தலைமையிலான குழு செல்கின்றது.

இக் குழுவில் யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள், காங்கேசன் களஞ்சியக் காப்பாளர், செயலக உயர் அதிகாரிகள், ப. நோ. கூ. சங்கபிரதிநிதிகள், சென்ஜோன் அம்புலன்ஸ் சேவை உத்தியோகத்தர்கள், வைத்திய அதிகாரிகள், சுங்கத் திணைக்கள அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் அடங்குவர்.

இக்குழு இரு இ. போ. ச. பஸ்களில் இன்று காலை 5 மணிக்கு யாழ். செயலகத்திலிருந்து புறப்பட ஏற்பாடாகி இருந்தது.

அரச அதிபரும், செயலக உயர் அதிகாரிகளும் ஒரு பஸ்ஸில் கொடிகாமம் வழியாக வடமராட்சி ஊடாக காங்கேசன்துறை செல்வார்கள்.

இரண்டாவது பஸ்ஸில் ஏனையவர்கள் இளவாலையூடாக சேந்தாங்குளம் செல்வர்.

அரச அதிபர் குழு இராணுவ அதிகாரிகளின் அனுமதியுடன், மற்றைய குழுவை சேந்தாங்குளத்தில் இருந்து அழைத்துச் செல்லும்.

இளவாலையூடாக செல்லும் குழுவுடன் ப.நோ. கூ. சங்க லொறிகளும் செல்லும்.

இந்திய நிவாரணப் பொருள்களை களஞ்சியப்படுத்தவே இந்த லொறிகள் செல்லும்.

**திடீர் மாற்றம்**

ஆரம்பத்தில் அரச அதிபரும், மற்றவர்களும் செல்லும் வாகனங்கள் கொடிகாமம் ஊடாகவே செல்வதென தீர்மானிக்கப் பட்டிருந்தது.

இறுதி நேரத்தில் அரச அதிபரும், செயலக ஊழியரும் மட்டுமே கொடிகாமம் ஊடாக செல்வதென தீர்மானிக்கப்பட்டது.

இந்தியக் கப்பல்களில் வரும் நிவாரணப் பொருள்கள் காங்கேசன்துறை களஞ்சியத்திலேயே வைக்கப்படும்.

**இரண்டாவது கப்பல்**

இதேவேளை—

நிவாரண உணவுப் பொருள்களுடன் இரண்டாவது கப்பல் இன்று சென்னை துறைமுகத்தில் இருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கு புறப்படும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. 'எம். வி. பருக்கா' என்ற இந்தக் கப்பலில் உணவுப் பொருள்கள் ஏற்றும் வேலைகள் நேற்று சென்னைத் துறைமுகத்தில் ஆரம்பமாகின. (அ-எ-ள)

## லயனல் பெர்ணண்டோ யாழ். மாவட்டத்தின் சிவில் நிர்வாக அதிகாரி

திரு. லயனல் பெர்ணண்டோ யாழ். மாவட்ட சிவில் நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இதற்கான நியமனக் கடிதம் செவ்வாய் காலை ஜனாதிபதிஜெயவர்த்தனவினால் திரு. லயனல் பெர்ணண்டோவிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ் அரச அதிபருடன் இணைந்து இவர் பணியாற்றுவார் என்று அறிவிக்கப்படுகிறது.

இந்திய உணவுப் பொருள்விநியோகத்தை மேற்பார்வையிடும் கூட்டு இணைப்பு அதிகாரியாகவும் திரு. லயனல் பெர்ணண்டோ பணிபுரிவார். (உ-எ)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 25-06-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Thursday June 25, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org